கணபதி துணை

# அருள்மிகு கரைப்பிரான் ஆதிவிநாயகர்

தேவஸ்தானம், ஆனைக்கோட்டை

## விநாயக விரத இலக்ஷ நாம அர்ச்சனை ஹோம விழா

10 - 12 - 92 முதல் 29 - 12 - 92 வரை

தினசரி காலை — 9 00 மணி அபிஷேகம்
10.30 மணி புராணப் படிப்பு
11 00 மணி அர்ச்சனை ஆரம்பம்
12.00 மணி நிறைவு

இலக்ஷ நாம அர்ச்சனையில் பங்குபற்றும் குருமார்கள்

"சிவாகம கிரியா ஜோதி" சு. கைலாச நாதக் குருக்கள் (வண். சிவன் கோயில் பூஜா பரம்பரை ஆனைக்கோட்டை)
"வேதாகம ஞான பாஸ்கரன்" நா. மஹாதேவாக் குருக்கள் (தர்மசாஸ்தா குருகுலம் - இணுவில்)
'கிரியா பூஷணம்' சிவஸ்ரீ சு. கதிர்காமக் குருக்கள் (புதிய திண்ணைப் பிள்ளையார் கோவில் ஆனைக் கோட்டை)
'பிரதிஷ்டா ரத்தினம்' சிவஸ்ரீ க. குகதாசக் குருக்கள் (வராஹி அம்பாள் கோவில் கொக்குவில்)
'கிரியா திலகம்' சிவஸ்ரீ இ. கேதீஸ்வரக் குருக்கள் (சமிந்தப் பிள்ளையார் கோவில் ஆனைக்கோட்டை)
'கான விநோதன்' கோ. சண்முகநாதக் குருக்கள் (இந்தன் முத்து விநாயகர் கோவில் புளியங்கூடல்)
'பிரதிஷ்டா திலகம்' சிவஸ்ரீ சு. தியாகராஜாக் குருக்கள் (மூத்த நயினார் தேவஸ்தானம் ஆனைக்கோட்டை)
'சர்வபோதகர் தத்துவ வித்தகர்' பிரம்மஸ்ரீ சோம. நிர்மலேஸ்வர சர்மா (அந்திராசி முருகமூர்த்தி கோயில் ஆனைக்கோட்டை)
'சர்வசாதகர்' பிரம்மஸ்ரீ க. கிருஷ்னேஸ்வர சர்மா (புதிய திண்ணைப் பிள்ளையார் கோவில் ஆனைக் கோட்டை)
'உபசாதகர்கள்' பிரம்மஸ்ரீ ம. மகேந்திர சர்மா (வரத்தலம் பிள்ளையார் கோவில் பன்னாலை)
பிரம்ம ஸ்ரீ A. R. சர்மா (வைரவேஸ்வரம் இளவாலை)
ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பொன். சோம சுந்தரக் குருக்கள்

அன்பர்கள் அடியார்கள் யாவரும் இத் தெய்வீக வைபவத்திற் பங்கு பற்றி சர்வமங்களங்களையும் பெற்றுவாழ வேண்டுகிறோம்.

சோம சிவகுமார சர்மா
ஆதீன அர்ச்சகர்

(23587)


# நாளை

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நாளை மாலை 4 மணிக்கு "பிரித்தானியர் காலம்" என்ற தலைப்பில் அரசியல் கருத்தரங்கு ஒன்று நடைபெறவிருக்கிறது. விரும்பிய மாணவர்கள் கலந்து கொள்ளலாம் என்று விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் யாழ். கோட்டப் பிரிவு தெரிவித்துள்ளது.

## ஐ. நா. உயர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உயர் அதிகாரிகளான திரு. பேர-ஷாக், டாக்டர் பீற்றர் நிக்கலஸ் ஆகியோருடன் யாழ். அதிபர் பிரதிநிதி திரு. அசோக்குமாரும் கலந்து கொண்டார்.

விடுதலைப் புலிகள் சார்பில் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் பிரமுகர்களான திரு. யோகரத்தினம் யோகி, திரு. வே. பாலகுமாரன். யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம் பரிதி ஆகியோர் பங்குபற்றினர்.

பேச்சுவார்த்தைகள் சுமார் 3 மணி நேரம் நடைபெற்றன.

வடக்கு - கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகள் பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டன.

அகதி முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக் காட்டிய விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் ஐ. நா. தூதரகம் போன்ற நிறுவனங்கள் அகதி முகாம்களை விஸ்தரிக்கும் திட்டத்துக்கு பதிலாக பொருளாதார வேலைத் திட்டங்களை உருவாக்கி மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் உதவிகள் வழங்கவேண்டும்— என்று கேட்டுக் கொண்டனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தம் சொந்தக் கிராமங்களுக்குத் திரும்பிச்சென்று இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள ஏற்ற முறையில் இந்த நிவாரணத் திட்டங்கள் அமைய வேண்டும்— என்றும் வலியுறுத்தப்பட்டது.

யுத்தம் ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டு சமாதான, இயல்பு நிலை திரும்பிய பின்னரே வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்துள்ள ஈழத் தமிழ் மக்கள் திருப்பி அனுப்பப்படவேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டனர்.

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் இந்தியாவில் இருந்து தமிழ் அகதிகளை அழைத்து வருவது நியாயமற்றது என்றும் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டினர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான போக்குவரத்தைச் சீர்செய்வதன் பொருட்டு ஆனையிறவுப் பாதையைத் திறப்பது சம்பந்தமான பேச்சுக்களின்போது ஐ. நா. அதிகாரிகளின் ஆலோசனையை விடுதலைப் புலிகள் நிராகரித்தனர்.

அந்தப் பாதையைத் திறந்தால் இராணுவத்தினர் தமது நடவடிக்கையை விஸ்தரித்து பெரும் தாக்குதல் நடத்த வாய்ப்பு உண்டென்றும் சுட்டிக் காட்டப்பட்டது.

## யுத்த நிறுத்தம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"திவயின" சிங்கள நாளிதழ் நேற்று செய்தி வெளியிட்டிருந்தது. அச்செய்திக்கே அரசாங்கம் இப்போது மறுப்பு வெளியிட்டிருக்கிறது.

"விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் எந்த விதத்திலும் பேச்சுகள் நடத்தப்படவில்லை. "திவயின" செய்தி முற்றிலும் தவறானது. இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்மானத்துக்கு அமையவே அரசாங்கம் நடந்து கொள்ளும்.

"வடக்கு - கிழக்கு யுத்தம் தொடர்பான நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படவில்லை கடந்த காலங்களைப் போன்று அவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன."

— இவ்வாறு அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையை இலங்கை வானொலி அறிவித்தது. (உ-எ)

# சுப்பசொனிக் விமானங்கள் விசுவமடுவில் தாக்குதல்

கிளிநொச்சி, டிச. 10

கிளிநொச்சி விசுவமடுப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை "சுப்பசொனிக்" விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

காலை 8 மணிக்கு கிளிநொச்சி நகரப் பகுதி வான் பரப்பில் பிரவேசித்த இரு சுப்பசொனிக் விமானங்கள் நகரை வட்டமிட்டு மக்களைப் பீதிகொள்ளவைத்தன.

பின்னர் அவை விசுவமடுப் பகுதியில் அமைந்திருந்த கட்டடம் ஒன்றை மையமாக வைத்து மாறி மாறி குண்டுகளை வீசின.

கட்டடம் சேதமடைந்தது. அப்பகுதியில் இருந்த கால் நடைகள் பலகொல்லப்பட்டன. (உ-76)

## ஜி. சீ. ஈ. (சா. த.) பரீட்சை

# 2 ஆவது தொகுதி வினாத்தாள் நேற்று வந்து சேர்ந்தது

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான இரண்டாவது தொகுதி வினாத் தாள்களும் நேற்று இங்கு வந்து சேர்ந்தன.

விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்ட வினாத் தாள் பொதிகள் காங்கேசன் துறைக்குக் கொண்டுவரப் பட்டு பின்னர் அங்கிருந்து "மெரினாம்" கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டன. அவை நேற்று மாலை யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டன.

வினாத்தாள்களுடன் சாதிதாழிகளும் மற்றும் கல்வித் திணைக்களத்துக்கான ஆவணங்கள் எடுத்து வரப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5-118)

# பயிலுநர் பட்டதாரி ஆசிரியர் பயிற்சி நெறி 17 இல் ஆரம்பம்

பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சிநெறி, திட்டமிட்டபடி எதிர்வரும் 17 ஆம் திகதி கொட்டகலையில் ஆரம்பமாகும் என்று கொழும்பிலிருந்து கிடைத்த தகவல் தெரிவித்தன.

கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபரின் பிரதிநிதி கல்வி ராஜாங்க அமைச்சுச் செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும்—

அப்பேச்சுவார்த்தையின் போது கொட்டகலைக்கு வந்து சேர்ந்துள்ளவர்களுக்கான பயிற்சிநெறி திட்டமிட்டபடி நடைபெறும் என்றும்—

போக்குவரத்துக் கார (6 ஆம் பக்கம் பார்க்க)

# ஆண்டு 9 மாணவருக்கு தொழில் நுட்பப் பரீட்சை

## 17 ஆம் திகதியன்று நடக்கும்

யாழ்ப்பாணம், டிச. 10

ஆண்டு 9 வகுப்பு மாணவர்களுக்கான தொழில் நுட்பப் பாடப் பரீட்சை (முதற்தடவையாக எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கான வினாத்தாள்களும் நேற்று இங்கு வந்துசேர்ந்தன.

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி சீ ஈ; சாதாரண தரப் பரீட்சையின் இறுதி நாளான 17 ஆம் திகதியன்று பிற்பகல் இந்தப் பரீட்சை நடைபெறும் என்றும்—

பரீட்சைக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் யாழ் கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு ஏனைய மாவட்டங்களில் நடைபெற்ற இந்தப் பரீட்சை யாழ். மாவட்டத்தில் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)


யாழ். வட்ட லியோ கழகம் நடாத்தும்

# ரசிகர்களின் அபிமான உதைபந்தாட்ட வீரர் தெரிவுப் போட்டி - 1992

முதற் சுற்றில் (08-12-1992 வரை) முன்னணியில் உள்ள வீரர்களின் விபரங்கள்;

| | | |
|---|---|---|
| ★ கர்மகலராஜா (வெள்ளை) | (சென். றோக்ஸ்) | — 173 |
| ★ கொலின்ஸ் | (பாடும்மீன்) | — 144 |
| ★ பவுன் | (சென். மேரீஸ்) | — 144 |
| ★ பஞ்சன் | (சென். மேரீஸ்) | — 123 |
| ★ கீதன் | (பாடும்மீன்) | — 112 |
| ★ நிக்சன் (குட்டி) | (பாடும்மீன்) | — 97 |
| ★ றே.ய் | (சென். அன்ரனீஸ்) | — 73 |
| ★ குமணேந்திரன் (கிட்டு) | (அரியாலை) | — 51 |

இரண்டாம் சுற்றின் முடிவுகள் 19-12-92 இல் வெளியிடப்படும்;

யாழ். வட்ட லியோ கழகம்.

(கி/3973)



சாவகச்சேரி நகரசபை

# ஆதனவரி அறிவித்தல்

1992 ஆம் ஆண்டு 4 ஆம் காலாண்டிற்குரிய ஆதன வரியை தண்டம் இன்றி 31 12 92 ஆம் திகதி வியாழக்கிழமை பகல் 12 30 மணிவரை செலுத்திக் கொள்ளலாமென்பதையும் குறிப்பிடப்பட்ட திகதிக்கு பின்பு செலுத்தப்படும் வரியுடன், மதிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக் காணிகளுக்கும் முறையே 15 வீதமும் ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் தண்டமும் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் வரியிறுப்பாளர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

எனவே, 31-12-92 க்கு முன் வரிகளை நிலுவையின்றிச் செலுத்தி இச்சபையுடன் ஒத்துழைக்கும்படி சகலரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி, 08-12-92.

(சி/3973)



# அந்தியேட்டிக் கிரியைகள்

வில்லூன்றி அந்தியேட்டி மடத்தில் கிரியைகள் நடைபெறுகின்றன. கிரியை செய்ய விரும்புவோர் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

விபரங்களுக்கு:-

நேரம்:- காலை 6.00 — 10 00 வரை
இடம்:- வில்லூன்றித் தீர்த்தக்கரை அந்தியேட்டி மடம்

(23588)



கொக்குவில் இந்துக் கல்லூரி

# ஆண்டு 6 அனுமதி - 1993

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர், கல்லூரியில் சேர விரும்பின் 15-12-1992 செவ்வாய்க்கிழமைக்கு முன்பு தாம் கற்ற பாடசாலை அதிபர்களிடம் இருந்து பெற்ற சித்தியடைந்ததற்கான அத்தாட்சிப் பத்திரத்துடன் கல்லூரி வேலை நேரத்தில் நேரில் விண்ணப்பிக்கவும்.

இ. மகேந்திரன்,
அதிபர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

(சி-3971)



# 1st DEATH ANNIVERSARY

Born : 09 — 01 — 1954



Called to Rest: 10 — 12 — 1991

## S. Victor Arulpragasam

(Former Teacher, St. Patrick's College)

Gone is the light from our home
Stilled is the voice we loved
Vacant the place in our midst
Never to be filled again.

Wife & Children

5/1, Stanley College Lane,
Jaffna.

(23586)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், (அலுமாரி, கண்ணாடி அலுமாரி, சோக்கேஸ், கட்டில், மேசை இன்னும் பல) தட்டச்சு இயந்திரம், T. V., றேடியோக்கள், கிற்றார், ஓகன், மெலோடிக்கா, செரமிக் கிளாஸ் பொருட்கள், பிளாஸ்டிக், உடுப்புகள் மற்றும் குளிவிப் பாவனைப் பொருட்கள் விற்பனைக்கு உண்டு. 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(23550)

## கவிதைத் தொகுதி

யமனுக்கு சவால் விடவும், பூ உதிர்வுக்கு நியாயம் கற்பிக்கவும் முனைகின்ற வேலணையூர் சுரேஷின் "சவந்தீ" கவிதைத் தொகுதி புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

(23537)

## அதிர்ஷ்டம் அழைக்கிறது

எத்தகைய கஷ்டங்களும் தடைகளும், பிரச்சினைகளும் தீர சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். அதிர்ஷ்டம் அழைக்கிறது. ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாலை விற பயர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர்.

(23535)

## விஞ்ஞான ஆசிரியர் தேவை

5, 6, 7 ஆண்டுக்கு கற்பிக்கக்கூடிய அனுபவம் உள்ள விஞ்ஞான ஆசிரியர் தேவை. 15-12-92ற்கு முன் விண்ணப்பிக்கவும். விக்னா கல்வி நிறுவனம், 52, கிறான்லி றோட், யாழ்ப்பாணம்.

(சி-2816)

## இலவச திருமண சேவை

36 வயது, சித்திரை, சைவ போசன மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. அரச/தனியார் துறை விரும்பத்தக்கது. நேரடித் தொடர்பு கொள்ளவும்: த. விமலா, இலவச திருமணசேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி.

(23543)

## SPOKEN ENGLISH

3 மாத ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்படுகிறது Spoken English with English Grammar and English Literature கிழமையில் இரண்டு நாட்கள் V N Kandasamy, A I. B. Part - I (London), Inter (London) 87. திருநெல்வேலி றோட், (பரமேஸ்வரா சந்திக்கு அண்மையில்) கொக்குவில்.

(23578)

## தவறிவிட்டது

ஸ்ரீலங்கா வங்கிக்கு போகும் பொழுது அப்புசாமி பஞ்சவர்ணம் என்பவரின் அடையாள அட்டை, முக்கியமான கடிதங்கள், உடுப்புகள் அடங்கிய பிரயாணப் பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 349 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(23582)

## அப்பியாசக் கொப்பிகள்

பாடசாலை மாணவர்களுக்கு மலிவு விலையில் அப்பியாசக் கொப்பிகள் விற்பனையாகின்றன. அறிவகம் புத்தகசாலை. வெலிங்டன் சந்திக்கருகாமை, 374. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3970)

## தேவை

ஆவண தட்டச்சு அனுபவத்துடன் கூடிய இலிகிதர் தேவை. யாழ். நகரில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. இல. 870, கே/பா உதயன்.

(சி-2815)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

**O/L**

ஆண்டு 10, 9 புதிய பிரிவுகள் ஆரம்பமாகிவிட்டன

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — தயாநிதி |
| கணிதம் | — கதிர் |
| சமூகக்கல்வி | — கியூபேட் |
| தமிழ் | — பிரதீபன் |
| ஆங்கிலம் | — கிரி |
| வர்த்தகம் | — ஸ்ரீ |

(சி-2804)

## மணமேடை ஏறவிருந்தவர் காவலில்!

தென்மராட்சி, டிச. 10

மணமேடை ஏறவிருந்த மாப்பிள்ளை ஒருவர் காவல் நிலையத்திற்குக் கொண்டு வரப்பட்டார். இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது.

ஒரு பெண்ணைக் காதலித்து விட்டு வேறொரு பெண்ணை சீதனத்துடன் திருமணஞ் செய்வதற்கு ஆயத்தமாக இருந்தபோது காதலிக்க ஏமாற்றப்பட்ட பெண் சாவகச்சேரி காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்தார் என்றும் —

அதனையடுத்தே மணமகன் காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-117)

## அங்குரார்ப்பணம்

யாழ். மாவட்ட அரச ஊழியர்களின் இசைச் சங்கம் ஒன்று கடந்த வாரம் கல்வித் திணைக்களத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

மாவட்டத்தில் ஒருமுகப்படுத்தப்பட்ட செயற்பாட்டை உறுதி செய்வதற்கென மேற்படி யாழ் மாவட்ட இசைச் சங்கம் மாதம் ஒருமுறை கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஓ)

# யாழ். நகரப் பகுதியில் ஆயிரம் வீதிவிளக்குகள்

## மாநகரசபை திட்டம்

யாழ்ப்பாணம், டிச. 10

யாழ். நகர சபைப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் 'வீதி விளக்கு' திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

1993 ஜனவரியில் இருந்து ஆயிரம் வீதி விளக்குகளை அமைப்பதற்கு, யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

முதற்கட்டமான— 250வீதி விளக்குகள் அமைக்கும் திட்டம் இம்மாத இறுதிக்குள் பூர்த்தியாகிவிடும் என்றும்—

இரண்டாவது கட்டமான ஆயிரம் விளக்குகள் திட்டத்தை யாழ் மாநகர சபை அதிகாரிகள் துரிதகதியில் நடைமுறைப்படுத்த தயாராகி வருகின்றனர் என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

பிரதான வீதிகள் மட்டுமன்றி ஒழுங்கைகளிலும் கூட வீதி விளக்குகளை அமைக்க முடிவாகியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-17)

## யாழ். விவசாயிகளே!

இதோ விவசாயத் திணைக்களத்தினால் பரீக்சித்து மிக சமீபத்தில் சிபாரிசு செய்யப்பட்ட கிருமி நாசினி கார்குறோஸ் தயாரிப்பான

**TREBON 10 E.C**

**றெபொன் 10 ஈ. சீ**

1) கத்தரியைத் தாக்கும் சிற்றிலை நோயை (குருவிச்சை) உண்டாக்கும் மைக்குறோ பிளாஸ்மாவைக் காவிச் செல்லும் பச்சைப் பூச்சியையும், காய்துளைப்பான் (குத்தை) தண்டு துளைப்பான் புழுவையும்,

2) கோவாவைத் தாக்கும் மயிர்கொட்டி போன்ற புழுக்களையும்.

3) உருளைக்கிழங்கைத் தாக்கும் வெட்டுப்புழுக்களையும் நன்கு கட்டுப்படுத்தும்.

கமநலசேவை நிலையங்களிலும் ஏனைய கிருமி நாசினி விற்பனையாளர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-3959)

* அந்தியேட்டிக்குத் தேவையான (12" x 10" Recopy) புகைப்படங்கள்
* நினைவஞ்சலி கல்வெட்டு புத்தக அட்டை லேபல்களுக்கு வேண்டிய Line-Half Tone, Colour Blocks
* Photo Polymer (பிளாஸ்ரிக் Blocks)
* றபர் சீல்
* ஓவிய வேலைகள்
* விளம்பர ஸ்ரிக்கேஸ்

தரமாக குறைந்த விலையில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ள,

**கொழும்பு ஸ்ரூடியோ**

55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-3937)

## கைதடி நவீல்ட் செவிப்புலன் - விழிப்புலன் இழந்தோர் பாடசாலை

# மாணவர்களைச் சேர்த்தல் - 1993

1993 பாடசாலை அனுமதிக்காக 1988 தை 31ஆம் திகதிக்கு முன் பிறந்த செவிப்புலன் – விழிப்புலன் இழந்த பிள்ளைகள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இதற்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பாடசாலை அதிபரிடமிருந்து நேரில் அல்லது அஞ்சல் வழி மூலம் பெற்று விண்ணப்பிக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 31 — 12 — 1992

- அதிபர்.

நவீல்ட் பாடசாலை,
கைதடி.

(சி-3969)

## 16ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 19 — 08 — 1913



மறைவு: 25 — 11 — 1992

அமரர்

### கயிலாயஞ் செட்டியார் பழனிச்சாமி

(வண்ணை வெங்கடேசப் பெருமாள் கோவிலின் முன்னாள் அறங்காவலரும், ஓய்வுபெற்ற நெசவு மேற்பார்வையாளரும்)

திதி: பிரதமை 10 - 12 - 1992 (வியாழக்கிழமை)

இவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, இவரின் இறுதிச் சடங்குகளில் பங்குபற்றி, எமது துக்கத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறுகின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்:
குடும்பத்தினர், உறவினர்.

445. மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(23577)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 31 — 12 — 1931



மறைவு: 22 — 11 — 1991

### அமரர் வே. மாரிமுத்து

(மாவைகலட்டி, தெல்லிப்பழை-சிமெந்து தொழிற்சாலை-கரை பொருத்துனர்)

திதி: 10—12—1992

அன்புக்கும் பாசத்திற்கும் உரிய அன்பு அப்பா! ஆண்டு ஒன்று சென்றாலும், உங்கள் பிரிவால் ஆறாத் துயரில் வாடுகிறோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, மக்கள்,
மருமகன்.

தனிக்குளம், கொடிகாமம்.

(23566)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மனித உரிமையும் தமிழர்களும்

இன்று டிசம்பர் பத்தாம் திகதி, ஐ. நா. மனித உரிமைகள் தினமாகும். மனித உரிமைகள், சர்வதேச மட்டத்திலும், தேசமட்டத்திலும், சமூக மட்டத்திலும், தனிநபர் மட்டத்திலும் பேணப்பட வேண்டியவை.

குறிப்பாக அதிகாரத்தில் உள்ளவர்கள்— அரசாங்கத்தினர்— மக்களின் மனித உரிமைகள் மீறப்படாதிருக்க ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனம் வற்புறுத்துகிறது. இந்தப் பிரகடனத்தில் ஐ. நாவில் அங்கம் வகிக்கும் நாடுகள் யாவும் கையெழுத்திட்டுள்ளன.

ஆனால் உலகின் பெரும்பாலான நாடுகளின் அரசுகள், தமது நாட்டு மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுகின்றன. ஆட்சியாளர்கள் தமது சொந்த இலக்குகளை அடைவதற்காக மக்களின் தனிப்பட்ட, சிவில், அரசியல் உரிமைகளைத் தட்டிப் பறிக்கின்றனர்!

ஸ்ரீலங்கா அரசாங்கம் இதில் முன்னணியில் நிற்பது தெரிந்ததே. குறிப்பாகத் தமிழ் மக்களை அடக்கி ஆள வேண்டும் என்ற நினைப்பினால், அதனது செயற்பாடுகள் அனைத்தும் தமிழர்களின் சகல வித உரிமைகளையும் மீறுவதாகவே உள்ளது.

தமிழ் மக்களின் அரசியல், சிவில், கல்வி, கலாசார உரிமைகள் என்று எவற்றையும் விதி விலக்காக்காது யாவற்றையும் பறித்து வருகிறது. சுமார் கால் நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் சித்திரவதை செய்யும் மனித உரிமை மீறலுடன் தொடங்கி, இப்போது மக்களைக் குண்டு போட்டு அழித்து பாதுகாப்புடன் வாழும் உரிமையைப் பறித்து வருகிறது.

ஐ. நா. மனித உரிமைகள் பிரகடனத்தின் பதினைந்தாவது சரத்து ஒரு மனிதனின் தேசியத்துக்கு உத்தரவாதம் அளிக்கிறது. எந்த மனிதனது தேசியத்தையும் வேறு எவரும் இல்லாமற் செய்து விட முடியாது என்றும் அது கூறுகிறது.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு தமிழர்கள் தங்களது தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க முனைவதைக் குற்றமாகக் கருதுகிறது; அதற்காகத் தண்டிக்க முனைகிறது.

ஐ. நா. அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் சாசனத்தில் தேசிய இனம் ஒன்றின் சுயநிர்ணய உரிமை அதனது இயல்பாக அமைந்த உரிமை என்றும், அதனை எவரும் பறிக்க முடியாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால் ஸ்ரீலங்கா அரசு என்ன செய்கிறது? தமிழர்கள் தமது தமிழ்த் தேசியத்தை இனங்காட்டி அனுபவிக்க விடாது தண்டித்துத் தடுக்க முனைகிறது; தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க வகை செய்யாது தடை விதிக்கிறது;

தமிழர்கள் சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க அனுமதித்தால் அது நாடு பிளவுண்டு போவதற்கு அனுமதி அளிப்பது போலாகும் என்று எண்ணுகிறது. அதனால் ஒற்றையாட்சி என்ற அழுங்குப் பிடியைத் தளர்த்தி, சமஷ்டி அமைப்பைக் கொண்டுவர உள்ளூர மனங்கொண்டிருப்பது போலக் காட்ட முனைகிறது.

சமஷ்டி அரசமைப்பின் கீழ் உரிமைகளை அனுபவிக்கலாம் என்ற நிலையைத் தமிழர்கள் தாண்டிவிட்டார்கள். இப்போதென்ன இற்றைக்கு பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னரே தமிழர்களின் இந்த நிலைப்பாடு வெளிக்கொணரப்பட்டது.

சிங்களவரினதும் சரி, தமிழர்களினதும் சரி, முழு விடுதலை, சுதந்திரம், கட்டுப்பாடில்லாக இறைமையை அனுபவித்தல் ஆகியன சிங்கள தேசம், தமிழர் தேசம் என்ற இரண்டையும் புனருத்தாரணம் செய்து மீளக் கட்டுவதிலேயேஇப்போது தங்கியுள்ளது. — என்று அமரர் சி. கதிரவேற்பிள்ளை "மோதல் அல்ல சக வாழ்வு" என்ற தமது நூலில் தெரிவித்திருந்தார்.

# பிரிவினை வேண்டாம் என்பவர்கள் வவுனியா போகவே அஞ்சுகின்றனர்

## யதார்த்தம் இது என்கிறார் பிரேமா

கொழும்பு, டிச 10

"நாட்டைப் பிரிக்க இடமளிக்கக் கூடாது என்று கூறும் சிலர் பிரிவினையை எதிர்த்து கோஷங்களை எழுப்பிக் கொண்டும் பதாகைகளைத் தூக்கிக் கொண்டும், ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்துகின்றனர்.

ஆனால் அவர்கள் வவுனியாவுக்கோ அதற்கு அப்பாலோ பணிபுரியப் போகும்படி கேட்டால், பயப்படுகின்றனர்."

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச இவ்வாறு கூறினார்.

ஹொரணையில் ஆடை தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை அண்மையில் திறந்து வைத்து பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் எவராவது போய் பணி புரியும்படி கேட்டால் பலரும் பின்னடிக்கின்றார்கள். வடக்கு - கிழக்குக்குப் போய் பணியாற்றுவது என்றவுடன் அவர்கள் நோய் பிடித்தவர்கள் மாதிரி நடுங்குகின்றனர்.

தங்களுக்குப் பதில் வேறு யாரையாவது அங்கு அனுப்பும்படி மேலதிகாரிகளை கெஞ்சுகின்றனர்; பிரிவினை வேண்டாம் என்றால் வடக்கு-கிழக்குக்குப் போய் ஏன் பணி புரிய முடியாது? இன்றைய யதார்த்த நிலை இதுதான்.

நாட்டின் ஒற்றையாட்சி அமைப்பைப் பாதுகாக்க வேண்டும் என்று கூக்குரலிடும் இவர்கள், வடக்கு - கிழக்குக்கும் போய் பணிபுரிய மறுப்பதன் மூலம் நாட்டைப் பிரிப்பதற்கு உதவவில்லையா? தமது தாய்நாட்டின் ஒரு பகுதிக்குக் கூட போக இவர்கள் அஞ்சுகின்றார்கள்.

வவுனியா கூட இவர்களுக்கு மிகவும் "ஆபத்தான" பகுதியாகிவிட்டது. வவுனியாவுக்குப் போய் பணிபுரியும்படி நான் ஒருவரைக் கேட்டேன். அவர் பயந்துபோய் வேறு யாரையாவது அங்கு அனுப்பி வைக்கும்படி என்னைக் கேட்டார்.

நாடு பிரிக்கப்படாதிருக்க வேண்டுமெனில் ஏன் அவர்கள் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குச் செல்ல மறுக்க வேண்டும்?

நானும் எனது மந்திரிகளும், எம். பிக்களும் நாடு முழுவதும் சென்று வருகின்றோம். வன்செயல் புரிபவர்களால் என்னைக் கொல்ல முடியும். இறப்பு ஒரு நாள் வரும் அது தவிர்க்கமுடியாதது — என்றார். (ஒ-எ)

## இரு பெண்கள் உட்பட

# தமிழர்கள் அறுவர் இங்கிரியாவில் கைது

கொழும்பு, டிச. 10

இங்கிரியாவில் நான்கு தமிழ் இளைஞர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பில் இருந்து வியாபார நோக்கமாக இங்கிரியாவுக்கு இவர்கள் சென்றிருந்த சமயமே கைது செய்யப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை — இங்கிரியாவில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடியதாக இரு தமிழ்ப் பெண்களும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர். மற்றவர் கொழும்பு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்தவர்.

வெளிநாடுசெல்வதுசம்பந்தமாக தமது உறவினர்களிடம் தெரிவிக்கச் சென்றிருந்த போதே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-8)

## தெரிவுக்குழு முன் மற்றொரு யோசனை;

# 5 சட்ட சபைகள் கொண்ட சமஷ்டி அரசமைப்பு முறை

## முன்னாள் எம் பி. ஜலால்தீன் சமர்ப்பித்தார்

கொழும்பு, டிச.10

ஐந்து சட்டசபைகளைக் கொண்ட சமஷ்டி அரசமைப்பு முறையை உருவாக்க வேண்டும் என்று நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொத்துவில் தொகுதி முன்னாள் எம். பி. டாக்டர் எம். ஏ. எம். ஜலால்தீன் இந்த யோசனையை சமர்ப்பித்திருக்கிறார்.

ராஜரட்டை, உடரட்டை, பஹாதரட்டை, ருகுணுரட்டை மற்றும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் கொண்ட உதயரட்டை என்று சட்டசபைகள் அமைக்கப்பட வேண்டும் என்றும் — இவற்றுக்குப் புறம்பாக ஒவ்வொரு மாகாண நிர்வாகக் கவுன்ஸில்கள் இருக்க வேண்டும் என்றும் தாம் தமது யோசனையில் தெரிவித்திருப்பதாக டாக்டர் ஜலால்தீன் சண்டே ரைம்ஸுக்குத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்கள் சட்டவாக்க ரீதியில் இணைக்கப்படவேண்டும் என்றும் நிர்வாக ரீதியில் இம்மாகாணங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்றும் டாக்டர் ஜலால்தீன் தெரிவித்தார்;

இந்த யோசனை குறித்து பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவிப்பின் தான் அவர்களைச் சந்தித்துப்பேச தயாராக இருப்பதாகவும் அவர் சொன்னார். (ந-எ)

## சித்தன்கேணி, சுழிபுரத்தில் தங்கியுள்ள

# காரைநகர் மீனவர்களுக்கு கடனுக்கு வலைகள்!

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் — சித்தன்கேணி, சுழிபுரம் பகுதி முகாம்களில் தங்கியுள்ள மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகள் கடன் அடிப்படையில் விநியோகிக்கப்படவுள்ளன.

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ள மீனவக் குடும்பங்களுக்கே, வலி. மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு செஞ்சிலுவைச் சங்க இணையினராக கடன் அடிப்படையில் சுமார் 5 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் விநியோகிக்கப்படவுள்ளன. (ஒ-175-12)

# இலங்கை அணியிடம் நியூஸிலாந்து தோற்றது

கொழும்பு, டிச. 10

கொழும்பில் நியூஸிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை அணி 9 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டியது.

இன்னும் ஒன்றரை நாள் ஆட்டம் மிச்சம் இருக்கையில் — மூன்றரை நாள் ஆட்டத்திலேயே — இலங்கை அணி வெற்றிவாகை சூடியது.

ஓட்டவிபரம்:-

★ நியூஸிலாந்து:- முதல் இன்னிங்ஸ் - 102, இரண்டாவது இன்னிங்ஸ் - 361

★ இலங்கை அணி:- முதல் இன்னிங்ஸ் - 39[illegible] இரண்டாவது இன்னிங்ஸ்-ஒரு விக்கெட் இழப்புக்கு 73

இந்த டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணியின் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்திய முத்தையா முரளிதரன் இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

நியூஸிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையில் இதுவரை 11 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன. அவற்றில் இலங்கைக்குக் கிடைத்த முதல் வெற்றி இதுவாகும். (உ-6)

## கொழும்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைது நடவடிக்கைகளி[illegible] மத்தியில் பெரும் அச்சம் [illegible] பட்டது. (உ-எ-3)

## இரு பாடசாலைகள் தரமுயரும்

பருத்தித்துறை டிச. 10

வடமராட்சிக் கல்விக் கோட்டத்திலுள்ள மேலும் இரு பாடசாலைகள் தரமுயர்த்தப்படவுள்ளன.

நாகர்கோவில் கொத்தணியிலுள்ள நாகர் கோவில் அ.மி.த.க. பாடசாலை, குடத்தனை அ. த. க. பாடசாலை ஆகியனவே தரமுயர்த்தப்படவுள்ளன. (ஒ-118)

## வல்லைவெளியில் துர்நாற்றம்

வல்வெட்டித்துறை.டிச. 10

வல்லைவெளி ஊடாகச் செல்வோர் மூக்கைப் பிடித்துக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது! வாயை விட்டால் துர்நாற்றம் மூச்சை "அடைக்கிறது"!!

இறந்த ஆடு, மாடுகளின் கழிவுகள், எலும்புகள் அப்பகுதிகளில் வீசப்படுவதாலேயே துர்நாற்றம் எழுகிறது.

வேறு கழிவுப் பொருள்களும் அப்பகுதியில் கண்டபடி வீசப்படுவதால், சுகாதாரத்துக்கு பங்கம் ஏற்படும் நிலை அதிகரித்து வருகிறது. (ஒ-155)

## சமஷ்டி முறை வந்தால்

# வடக்கு-கிழக்குப் பிரதேசம் தமிழகத்துடன் சேர்ந்துவிடும்

## சிங்கள அமைப்பின் பீதி

கொழும்பு, டிச. 10

"இந்நாட்டில் சமஷ்டி அமைப்பினைத் தோற்றுவித்தால், இலங்கையின் வடக்கு—கிழக்குப் பிரதேசம் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகி விடுவதை தடுக்க முடியாது".

முன்னாள் அமைச்சர் காமினி ஜெயசூரிய, தலைவராகவுள்ள "சிங்கள ஆரக்ஷக சமிதாவ" என்றழைக்கப்படும் சிங்களவர் பாதுகாப்பு அமைப்பு சமஷ்டி அரசமைப்பு குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்நாட்டில் சமஷ்டி அமைப்பினைத் தோற்றுவிப்பதற்கு எதிராக காலத்துக்கு காலம் எமது இயக்கம் எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ளது. பிற்காலத்தில் தனியான அரசு ஒன்றினை அமைப்பதற்கான முதல் முயற்சியாகவே இது அமையும் என்பதனை சிங்கள மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் —

சமஷ்டி அமைப்புத் தொடர்பான விவரங்கள் மக்கள் முன்னிலையில் வைக்கப்படவில்லை. யூகோஸ்லாவியாவில் ஏற்பட்டது போன்ற ஒரு நிலை இங்கும் ஏற்படக் கூடாது. ஆதலால் சிங்கள மக்கள் விழிப்புடையவர்களாக இருக்க வேண்டும் — என்றும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது;

இந்த அறிக்கையின் மற்றொரு பகுதி 08-12-92 ஆம் திகதி உதயனில் வெளியிடப்பட்டிருந்தது. (ஒ-எ)

## ராவை வீழ்த்த கட்சிக்குள் சதி!

புதுடில்லி, டிச. 10

பிரதமர் நரசிம்மராவைப் பதவியில் இருந்து விலக்க இந்திரா காங்கிரஸ் கட்சியினுள் சிலர் முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் பதவியில் ஒரு கண் வைத்திருப்பவரான பாதுகாப்பு அமைச்சர் சரத்பவாரும் அவரது ஆதரவாளர்களும் இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக செய்தியாளர்களை மேற்கோள்காட்டி வெளிநாட்டு [illegible] அறிவித்தது. (உ-எ)

## முஸ்லிம் தலைவர்களும் கைதாகினர்

புதுடில்லி, டிச 10

ஊரடங்குச் சட்டத்தை மீறி பிரதமரின் வாசஸ்தலத்துக்கு ஊர்வலம் ஒன்றை நடத்திச் செல்ல முயற்சித்த புதுடில்லி ஜும்மா மசூதி இமாம் புஹாரி, பாபர் மசூதி நடவடிக்கைக் குழுத் தலைவர் சுல்தான் சலாஹுதீன், ஜனதாதள் எம். பி. பிமான முகமது ஹர்ஷத் மற்றும் 7 ஆதரவாளர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். (உ-எ)

## மாணவிகளுக்கு கராத்தே பயிற்சி!

தமிழ் நாட்டில் கல்லூரி மாணவிகளுக்கு கராத்தே பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி ஆறு மாத காலத்துக்கு — இலவசமாக வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

# சிரேஷ்ட ராணுவ அதிகாரிகள் ஓய்வுபெற முன்வந்துள்ளனர்

## மறுக்கிறார் பிரதமர் விஜேதுங்க

கொழும்பு, டிச. 10

இராணுவத்தில் உள்ள சிரேஷ்ட அதிகாரிகள் பலர் ஓய்வு பெற முன்வந்துள்ளனர் என்பதில் உண்மையில்லை. அரசாங்கத்தை அவமதிப்புக்கு உள்ளாக்கவே இச் செய்தி பரப்பப்பட்டுள்ளது.

பிரதமர் டி. பி. விஜேதுங்கா நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏனைய தரங்களைச் சேர்ந்த சிப்பாய்களும் படையை விட்டு ஓடவில்லை என்றும் பிரதமர் சொன்னார்.

சுதந்திரக் கட்சி எம். பி. சி. வி. குணரத்தினாவின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

# ராமர் ஆலயத்தை இடித்தால் இந்துக்கள் கொதித்து எழுவர்

பாபர் மசூதி இருந்த இடத்தில் கட்டப்பட்ட இராமர் ஆலயத்தை இடிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுத்தால் இந்துக்கள் கொதித்து எழுவார்கள்.

— இப்படி பாரதிய ஜனதாக் கட்சி எச்சரித்திருக்கிறது!

இந்த அமைப்புகளைத் தடை செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்திருப்பது நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் என்றும் அக்கட்சி தெரிவித்திருக்கிறது. (உ-த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூபதி சின்னத்துரை

(இளைப்பாறிய சுகாதார வைத்திய பரிசோதகர்)

நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட பூபதி சின்னத்துரை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிரேசன் மாஸ்டர் கதிரவேலு தம்பையாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஆசிரியர் சாமுவேல் ஆறுமுகம் சின்னத்துரையின் அன்பு மனைவியும், ஆனந்த செல்வம் (சிவில் பொறியியலாளர், புத்தளம்), செல்வானந்தேஸ்வரி (மருந்தாளர், அரசினர் வைத்தியசாலை, கண்டி), Dr. சர்வானந்தேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும், ஜெபரஞ்சினி, சற்குணம் (பொறியியலாளர் R.V.D.B), Dr. மகேந்திரயோகம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், சற்குணசிங்கம், ஜெயராஜசிங்கம், தனபாலசிங்கம், ராஜலக்சுமி ஆகியோரின் சகோதரியும், ஜெபானந்தி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெபானந்தன் (சுண்டுக்குளி கல்லூரி), அக்ஷயா (கண்டி), கோபிராஜ் (கண்டி), மோகனராஜ் (கண்டி), தாமரா (லண்டன்), வசந்தரா (லண்டன்), வருந்தி (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10 - 12 - 1992) வியாழக்கிழமை தகனக்கிரியைக்காக பிற்பகல் 2-30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
சி. ஆனந்த செல்வம்.
(மகன்)

820, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(23583)

## சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம்

(இளைப்பாறிய கணக்காய்வு உத்தியோகத்தர்)

கந்தரோடையை வசிப்பிடமாகக் கொண்டவராகிய சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம் 9 - 12 - 92 இல் காலமானார்.

அன்னார் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், சிவதாஸன் (புடவைத் திணைக்களம், யாழ். கச்சேரி), சிவநேசன் (அவுஸ்திரேலியா), சிவனேஸ்வரி (U. K), காலஞ்சென்ற சிவானந்தி (முன்னாள் ஊழியர், யாழ். செயலகம்), சிவாம்பிகை (ஹெயிறைற், கொழும்பு), சிவயோகன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்—

ஆனந்தேஸ்வரி, சரோஜினி (அவுஸ்திரேலியா), ஹரிச்சந்திரா (U. K), இரட்ணராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும்—

சுஜித்தா, சங்கீதா, சிவஜெனன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற சிவஞானத்தின் (D O A) அன்புச் சகோதரனும், இராசையா, குருசாமி, தங்கரத்தினம், துரைஐயா, தங்கசாமி, அன்னபூரணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இவரது சமக்கிரியைகள் இன்று (10 - 12 - 92) காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று கந்தரோடை மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

"சிவ வாசா"
கந்தரோடை,
சுன்னாகம்.

(5448)

தகவல்:
சி சிவதாஸன்
(மகன்)

## திருமதி அம்பலவாணர் சின்னத்தங்கம்

துன்னாலையை பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்டவராகிய திருமதி அம்பலவாணர் சின்னத்தங்கம் நேற்று (09- 12- 92) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூ. அம்பலவாணரின் மனைவியும், பரமேஸ்வரன் (கணக்காளர், காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை), நடேஸ்வரி (இங்கிலாந்து), ஞானேஸ்வரி (ஆசிரியை, பிஷப்ஸ் கல்லூரி கொழும்பு), ஆகியோரின் தாயாரும், பாலேந்திரா (இங்கிலாந்து), சிவசுப்பிரமணியம் (பெற்றோலிய கூட்டுத்தாபனம், கொலன்னாவ), தேவராணி ஆகியோரின் மாமியும், விபுலன், சபேந்தன் (இங்கிலாந்து), வனிதா, பிரபா, ஜெகன் (உடுவில் மகளிர் பாடசாலை) ஆகியோரின் பேத்தியுமாவார்.

சமக்கிரியைகள் 10- 12- 92 வியாழக்கிழமை காலை 11. 00 மணியளவில் சுன்னாகத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
அ. பரமேஸ்வரன்
(மகன்)

19, கடலைப்புலம்,
சுன்னாகம்.

(சி/2525)

## கமலினி சூசைதாஸ்

யாழ்ப்பாணம், 143/2, ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த கமலினி சூசைதாஸ் என்பவர் 9-12-92 நேற்றுக் காலமானார். இவர் A. V. சூசைதாஸ் (விவசாயத் திணைக்களம், கிளிநொச்சி), யசிந்தா ஆகியோரின் அன்பு மகளும், அனிற்சுவின்ரஸ் (சென். ஜோன்ஸ் கல்லூரி), ஜெனிற் கமிலஸ் (சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற திரவியம் பிலிப், மரியம்மா, வேதநாயகம் மற்றும் லூர்த்தம்மா ஆகியோரின் ஆசைமிகு பேர்த்தியும், புஷ்பராணி செல்வராஜா, செல்வி ஜெனிற்றா பிலிப் செல்வராஜா (கிளிநொச்சி கச்சேரி முன்னாள் பிரதம லிகிதர்), அன்ரன் (அவுஸ்திரேலியா), கிறிஸ்ரி (திருகோணமலை) ஆகியோரின் அன்புப் பெறாமகளும், புஸ்பராணி ஜீவராஜா, அன்புமணி, செல்லத்துரை, ஸிஸிமரியதாஸ், சுகிலா சிவராஜா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (10-12-92) இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு இவரது இல்லத்தில் இருந்து நல்லடக்கம் செய்வதற்காக யாழ். அர்ச். கொஞ்சேஞ்மோதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

தகவல்:
A. V. சூசைதாஸ்
(தந்தை)

143/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(23589)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 231/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## சார்ள்ஸ்-டயானா பிரிந்து வாழ முடிவு

லண்டன், டிச. 10

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்சும் இளவரசி டயானாவும் பிரிந்து வாழ முடிவு செய்திருப்பதாக பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

மணவாழ்வில் ஏற்பட்ட மனக்கசப்பைத் தொடர்ந்து சார்ள்சும் டயானாவும் நீண்ட நாட்களாகப் பிரிந்து வாழ்வது தெரிந்ததே. ஆனால் அவர்கள் இருவருக்கும் இடையே பிரிந்து வாழ்வது என்ற முடிவு ஏற்பட்டிருப்பதாக தற்போதுதான் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

அவர்கள் இருவரும் சட்டபூர்வமாக விவாகரத்து செய்யப் போவதில்லை என்றும் —

அவர்களது பிரிவில் அரசியல் சாசன முக்கியத்துவம் எதுவும் இல்லை என்றும் பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் தெரிவித்தார்.

தங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் அவர்கள் இருவரும் சமபங்கை எடுத்துக் கொள்வர் என்றும் அவர் சொன்னார். (உ-5)

## இலட்ச நாம அர்ச்சனை

யாழ்ப்பாணம், டிச. 10

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலயத்தில் இன்று விநாயகர் விரதத் தொடக்கத்துடன் இலட்ச நாம அர்ச்சனையும் ஆரம்பமாகும்.

தினமும் பஞ்சமுகார்ச்சனையுடன் ஹோமமும் நடைபெற்று இம்மாதம் 29 ஆம் திகதி கஜமுகசுர சம்கார விழாவுடன் இலட்ச நாம அர்ச்சனை பூர்த்தியாகும். அடுத்த நாள் 30 ஆம் திகதி சங்காபிஷேகம் பெருவிழா இடம்பெறும். (அ)

## பொது வேலைநிறுத்தம் வெற்றியளிக்கவில்லை

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து அக்கட்சி விடுத்த பொது வேலை நிறுத்த அழைப்புக்கு மக்கள் அதிகம் செவிசாய்க்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியிலிருக்கும் மாநிலங்களில் மட்டும் ஆங்காங்கே பொது வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## விவசாயிகளுக்கு வாளிகள்!

திருநெல்வேலி, டிச. 10

நல்லூர் கமத் தொழில் நிலையத்தினால் மேட்டு நில விவசாயிகளுக்கு வாளிகள் வழங்கப்படவுள்ளன.

## வடக்கு—கிழக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை என்றும் —

மேலும் பலவற்றைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்றும் —

விமானப்படை உயர் அதிகாரிகள் கடந்த சில மாதங்களாக பாதுகாப்பு அமைச்சை வற்புறுத்தி வருகின்றனர்.

அதன் விளைவாகப் பாதுகாப்பு அமைச்சு அவசரமாக விமானங்களையும், ஹெலிக்கொப்டர்களையும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்து வருகிறது.

இதன் முதற்கட்டமாக ஆர்ஜன்ரீனாவில் இருந்து "புக்காரா" ரக விமானங்களை வாங்குவதற்குக் கடந்த மாதம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இப்போது "மிக்" ரக ஹெலிக்கொப்டர்களை வாங்குவதற்கு கேள்விக் கட்டளைகள் கோரப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

## பயிலுநர்...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வமாக பயிற்சிக்குச் சமுகமளிக்க முடியாத யாழ்ப்பாண மாணவர்களுக்கு மீண்டும் சந்தர்ப்பம் வழங்குவதற்கான திகதி குறித்துப் பின்னர் பரிசீலனை செய்யப்படும் என்றும்—

[illegible]
[illegible]
கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (க-3-118)

## யாழ். மாணவர்களின் ஜூன் மாத முத்திரைகளுக்கு சீனியே வழங்க வேண்டும்

யாழ்ப்பாணம், டிச. 10

பாடசாலை மாணவர்களுக்கான ஜூன் மாத மதிய உணவு முத்திரைக்கு சீனி மட்டுமே வழங்க வேண்டும் என யாழ். செயலக புனர்வாழ்வு பிரிவு சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான மாணவர் மதிய உணவு முத்திரைகளுக்கு விநியோகிக்கத் தேவையான பொருட்கள் சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும் வழங்கப்பட்டிருப்பதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

22 ப. நோ. கூ. சங்கங்களுக்கும் 349 மெற்றிக் தொன் சீனி, 494 மெற்றிக்தொன் அரிசி என்பன வழங்கப்பட்டுள்ளன என்றும்—

ஜூன் மாத முத்திரைக்கு மாணவர்கள் சீனியையும், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய முத்திரைக்கு அரிசியையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், நல்லூர் ப. நோ. கூ. சங்கங்களுக்கு 23 மெற்றிக்தொன் சித்தாமணிக் கடலையும் வழங்கப்பட்டுள்ளது (ஓ 5)

## விநியோகம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 10

கடந்த ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான மாணவர் மதிய உணவு முத்திரைகளுக்குரிய உலர் உணவுப் பொருள் விநியோகம் நாளை வெள்ளிக்கிழமை முதல் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு உட்பட்ட பகுதிகளில் ஆரம்பமாகும்.

பொருள் விநியோகத்தை முன்னிட்டு நமது கிளைகள் சனி, ஞாயிறு தினங்களிலும் முழுநேரம் திறந்திருக்கும் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (உ-5)

## ஊர்காவற்றுறை மக்களுக்கு ம-எண்ணெய்

யாழ்ப்பாணம், டிச. 10

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தினால் அப்பகுதி மக்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட ஐந்து லீற்றர் மண்ணெண்ணெயை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் அதனை 15 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளும்படி சங்கம் கேட்டுள்ளது. (உ)

## 50 இந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சூறையாடப்பட்டுள்ளன, அவர்களின் பெருமளவு உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. (உ-6)

ஆண்டு - 5

புலமைப் பரிசில் வகுப்பு

ஆரம்பம்: 12 - 12 - 1992
பிற்பகல் 4 மணி

ஆரம்ப பிரிவு
(PRIMARY SECTION)

யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி-2891)

# மரண அறிவித்தல்கள்

## ச. மார்க்கண்டு

ச. மார்க்கண்டு (இளைப்பாறிய அதிபர்) 9-12-92 நேற்று காலமாகிவிட்டார். அன்னார் தனபாக்கியரத்தினத்தின் கணவரும், திருமதி குலேந்திரா செல்வராஜா, திருமதி சந்திரா சிவநாதன் (U. K.), திருமதி ரவீந்திரா மகேந்திரராஜா (U. K.), இந்திரா (ஆசிரியர், கண்டி), கோசேந்திரா (ஆசிரியர், இந்து மகளிர் கல்லூரி), முகுந்தன் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

சமக்கிரியைகள் 543, கஸ்தூரியார் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று பி. ப. 2 00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குலேந்திரா செல்வராஜா
(மகள்)

543, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(23590)

## சின்னையா இராசையா

சங்கானை கிழக்கு 7 ஆம் கட்டையைச் சேர்ந்த சின்னையா இராசையா (இளைப்பாறிய யாழ். மாவட்ட அரசாங்க மார்க்கட்டுத்தாபன முகாமையாளர்) 9-12-92 நேற்றுக் காலமாகிவிட்டார்.

இவர் செல்வராணியின் அன்புக் கணவரும், கட்டுடையைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னையா தம்பதிகளின் அன்பு மகனும், பொன்னம்பலம் நாகலிங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சி. தியாகராசாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நாகலிங்கம் பொன்னையா, நாகலிங்கம் செல்வரத்தினம் (கொழும்பு), நாகலிங்கம் இரத்தினசிங்கம் (கனடா), நாகலிங்கம் குணசிங்கம் (U. K), இராசரத்தினம் மனோன்மணி (மலேசியா), துரைச்சாமி முத்துலட்சுமி, இராசேந்திரம் இரசசம்மாள் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் (10-12-92) இன்று பி. ப. 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சங்கானை காரசி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை இத்தால் உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகிறோம்.

தகவல்:
இ. செல்வராணி
(மனைவி)

7 ஆம் கட்டை,
சங்கானை.

(23591)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org